DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | C.C.No.59/2020 |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | | |
|---|---|---|---|
| | { | Prosecution | |
| Deposition of witness for | { | Defence | DW.2 |
| | { | Court | |

Name : டேனி மாதவன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.04.2022.

<u>முதல் விசாரணை</u>

நான் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வடசேரியில் துணை கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களுடைய வங்கி கணக்கில் சிபு என்பவருக்கு 31964903030 என்ற வங்கி கணக்கு உள்ளது. மேற்சொன்ன வங்கி கணக்கு 29.09.2011 அன்று துவங்கப்பட்டது. வங்கி கணக்கை துவங்கும்போதே காசோலை புத்தகமும் 1 வாரத்திற்குள் கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலை 093109 முதல் 093116 என்ற காசோலைகள் எங்களுடைய வங்கி மூலமாக வாடிக்கையாளருக்கு கொடுக்கப்பட்டது, 2019 ஆம் வருட காலத்தில் கொடுக்கப்பட்டது. காசோலை எண் 093112 என்ற காசோலை உங்கள் வங்கி

மூலமாக கொடுக்கப்பட்டது என்றால் 2019 ஆம் வருட காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கலாம், மேலும் அது குறித்த விவரங்கள் என்னிடம் இல்லை. காசோலை எண் 093112 என்ற காசோலையானது எப்போது உங்கள் வங்கியில் ஸ்டாப் பேமெண்ட் வாடிக்கையாளர் சிபு என்பவரால் 24.08.2019 தேதி கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலை எண் 093109 முதல் 093116 உள்ள 8 காசோலைகளையும் நிறுத்தி வைக்குமாறு 24.08.2019 தேதி வாடிக்கையாளர் சிபு என்பவரால் கொடுக்கப்பட்டது. மேற்படி வாடிக்கையாளர் என்ன காரணத்திற்காக காசோலைகளை நிறுத்துமாறு கொடுத்திருப்பார், அந்த விவரங்கள் இல்லை. எங்கள வங்கியல் அதற்கான ஆதராங்க்ள இருக்கும். அவர் மின்னணு மூலமாக தான் காசோலையை நிறுத்துமாறு கொடுத்தார் என்றால் சரிதான், அவர் காசோலையை நிறுத்துமாறு 24.08.2019 அன்றே 8 காசோலைகளை நிறுத்தி 590 ரூபாய் அதற்காக பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வடிக்கையாளர் சிபு என்பவர் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து விவரங்கள் என்னிடம் தற்போது இல்லை.

புகார்தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.